

ශ්‍රී ලංකා ජාතික දිනය නිමිත්තෙන්
ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදස මැතිතුමා
ජාතිය අමතා කළ කථාව
1992 පෙබරවාරි මස 04 වන දින

இலங்கையின் தேசிய தினத்தை முன்னிட்டு
அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச
அவர்கள் ஆற்றிய உரை
1992 பெப்புருவரி 04 ஆந் திகதி

# ADDRESS TO THE NATION
BY HIS EXCELLENCY RANASINGHE PREMADASA, PRESIDENT
ON THE OCCASION OF THE
NATIONAL DAY OF SHRI LANKA
4TH FEBRUARY, 1992

BKT 0120
25/08/2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# ශ්‍රී ලංකා ජාතික දිනය නිමිත්තෙන් ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා ජාතිය අමතා කළ කථාව 1992 පෙබරවාරි මස 04 වන දින

අද අපේ ජාතික දිනයයි. විදේශීය පාලනයෙන් අප රට මිදුණේ අද වැනි දවසකයි. ඒ, 1948 පෙබරවාරි මස 04 වැනිදයි. ඒ අසිරිමත් සිද්ධිය අපේ ඉතිහාසයට එක්වී හරියටම අවුරුදු 44ක් වෙනවා. නිදහසේ පියා — මහාමාත්‍ය ඩී. එස්. සේනානායක මැතිතුමා, නිදහස සංකේතවත් කළ අපේ ජාතික කොඩිය එද එසවූයේ මෙතැනදීමයි.

අධිරාජ්‍යවාදී පාලනය පැවතුණු අඳුරු සමය අප මතකයට එනවා. ඒ සමයේදී නිදහස පිළිබඳ ගිනිසිළුව දැල්වූ ගිහි පැවිදි විරවරයින් අප ගෞරවයෙන් සද සිහිපත් කළ යුතුයි. මෑත කාලයේ දී නිදහස සඳහා අප දිරිගැන්වූ පැවිදි උතුමන් ද, සිංහල, දෙමළ, මුස්ලිම් හා බර්ගර් නායකයින් ද අපේ උපහාරයට පාත්‍රවිය යුතුයි.

එද, එක ලේ බිඳකුදු නොහෙළා එක්සත්ව අප ලබාගත් නිදහස කෙතරම් උත්තරීතරද ? මෙද අප රටේ ඒකීයභාවය රැක ගැනීමට අහිංසක රුධිර ධාරා වැගිරෙනු දකීම කෙතරම් සංවේගජනකද ? හැම ජන කොටසකටම සාධාරණය ඉටු කරමු. ඒ සඳහා කාගේත් පොදු එකඟතාවක් ඇති කරගනිමු. ඒ මඟින් අපේ රටේ ඒකීයභාවය සුරක්ෂිත කර ගනිමු. හිංසාව පරාජය කොට අවිහිංසාව ජයග්‍රහණය කරවමු.

නිදහස අවශ්‍ය වූයේ විමුක්තිය ළඟා කර ගැනීමටයි. නිදහස, පිටතින් ලබාගත හැක්කකි. විමුක්තිය අප තුළින්ම උදකර ගත යුත්තකි. නිදහස මඟක් පමණයි. විමුක්තිය අපේ අරමුණයි. විමුක්තිය උදවන්නේ මෙත්තා, කරුණා, මුදිතා, උපේක්ඛා ප්‍රගුණ කර ගැනීමෙනි.

අපේ ආර්ථික රටාව දැන් ප්‍රාණවත්. අපේ ප්‍රජාතාන්ත්‍රිය පාලන තන්ත්‍රය දැන් ශක්තිමත්. පොදුජන ආරක්ෂාව සඳහා ත්‍රිවිධ හමුදාවත්, පොලිසියත් දැන් කැපවීමෙන් ක්‍රියා කරනවා. කුසලතා මත දැන් සාධාරණය ඉටු කෙරෙනවා. විනය දැන් ස්ථාපිත වීගෙන එනවා. දකුණු ආසියා කලාපයේ නායකත්වය දැන් ශ්‍රී ලංකාවට හිමිවී තිබෙනවා. මුළු මහත් දකුණු ආසියා කලාපයේම සාමකාමී සහජීවනයත්, අන්‍යොන්‍ය සමෘද්ධියත් සඳහා දැන් අප පුරෝගාමීව ක්‍රියා කරනවා.

සිංහල, දෙමළ, මුස්ලිම්, බර්ගර් යන සියලුම ජන කොටස් අතර සුහදතාව වඩාත් තහවුරු කරමු. උද්වේගකර හැඟීම්වලට වහල් නොවෙමු. හිංසාවත්, භීෂණයත් පිටු දකිමු. අයුක්තියට හිස නොනමමු. භීතියෙන් සිත සසල කර නොගනිමු. පටු වාද භේදවලින් නොබෙදුණු රටක් බවට ශ්‍රී ලංකාව පත් කරගනිමු. ඒ සඳහා අවශ්‍ය ආත්ම සංයමය වගා කර ගනිමු.

විදේශ ආධිපත්‍යයෙන් අප මිදුණේ කුමක් සඳහාද ? විදේශ පාලනය වෙනුවට ස්වදේශීය පාලනයක් සඳහා පමණක්ද ? නැහැ ! දේශීය ජනතාව මෙහෙයවන පාලන තන්ත්‍රයක් තුළ අදීන ආර්ථිකයක් ගොඩනැඟීම සඳහායි ; දේශීය ජනතාව මෙහෙයවන පාලන තන්ත්‍රයක් තුළ විවිධ ජන කොටස් අතර සමගි සන්ධානයක් ඇති කරලීම සඳහායි ; දේශීය ජනතාව මෙහෙයවන පාලන තන්ත්‍රයක් තුළ සාරධර්ම පදනම් කරගත් සමෘද්ධිමත් සමාජයක් උදාකිරීම සඳහායි : ඒ උදාරතර අරමුණු ඉටු කරගැනීම සඳහා වඩ වඩාත් කැපවීමට අද වැනි දිනක අප අධිෂ්ඨාන කරගත යුතුයි.

දේශීය නිෂ්පාදන අපනයනයෙන් විදේශ සම්පත් අප උපයාගත යුතුයි. ඒ පමණට අප රටේ ආර්ථික අදීනත්වය තහවුරු වෙයි. අප රට විවිධ ජන කොටස් අතර සමගි සන්ධානය දැඩි කරගත යුතුයි. ඒ පමණට අප රටේ ආරක්ෂාව ස්ථාපිත වෙයි. අපේ සාරධර්ම අනුව සමාජ සාධාරණය ඉටු කළ යුතුයි. ඒ පමණට අප රටේ ස්වෛරීත්වය ඔපවත් වෙයි. 1976 දී, ප්‍රතිපක්ෂයේ සිටි අවධියේ, මවිසින් ලියූ " රස කවි සිතුවිලි " තුළ මෙ හැඟුම මා සඳහන් කළේ මෙන්න මෙහෙමයි :

අපගේ කුසගිනි නිවන්න – නොරටින් බත අපට එපා
අපගේ ගත විළි වසන්න – නොරටින් වත අපට එපා
අපගේ දුක සැප බලන්න – පිට කෙනෙකුගෙ දෙනෙත එපා
අපගේ පැන විසඳලන්න – පිට රටවල නුවණ එපා

විදේශ ආධාරවලින් තඩත්තු වන පමණට අප විදේශීය අණසකට යටත් වන බව අමතක නොකළ යුතුයි. විවිධ ජන කොටස් අතර වාද භේද වගා වූ පමණට අප විදේශීය බලපෑම්වලට ගොදුරු වන බව අමතක නොකළ යුතුයි. අනාචාරයට අවකාශ තැබූ පමණට අප විදේශීය ග්‍රහණයට හසු වන බව අමතක නොකළ යුතුයි.

මේ යථාර්ථය අවබෝධ කරගනිමු: ඒ අනුව ප්‍රායෝගිකව ක්‍රියා කරමු. ජාතික නිදහස මගින් ජනතා විමුක්තිය ලඟා කරගත හැක්කේ එවිටයි.

සැමටම තෙරුවන් සරණයි !

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# இலங்கையின் தேசிய தினத்தை முன்னிட்டு அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை 1992 பெப்புருவரி 04 ஆந் திகதி

இன்று எமது தேசிய தினமாகும். இத் தினத்தைப் போன்ற ஒருநாளில் தான் அந்நியர் ஆட்சியிலிருந்து நாங்கள் விடுதலை பெற்றோம், அந்த நாள் 1948 பெப்புருவரி 04 ஆந் திகதியாகும். அந்த வரலாற்றுப் பெருமைமிக்க நிகழ்ச்சி இடம்பெற்று இப்பொழுது 44 ஆண்டுகள் கழிந்துள்ளன. சுதந்திரத் தின் தந்தையான மாட்சிமைபொருந்திய டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் அன்று இதே இடத்தில் எமது விடுதலையின் சின்னமான தேசியக் கொடியை ஏற்றினார்.

ஏகாதிபத்திய ஆட்சி நிலவிய இருண்டதோர் காலப்பகுதி எமது ஞாபகத்துக்கு வருகிறது. விடுதலை விளக்கினை ஏற்றிய சான்றோர்களை இந்த நேரத்தில் நினைவுகூருதல் வேண்டும். அண்மைக் காலத்தில் சுதந்திர வேட்கையினை எமது உள்ளங்களில் தூண்டிவிட்ட சமயக்குரவர்களுக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் ஆகிய இனங்களின் தலைவர்களுக்கும் நாங்கள் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

அன்று ஒருதுளியேனும் இரத்தம் சிந்தாமல் நாங்கள் பெற்றுக்கொண்ட சுதந்திரம் எவ்வளவு மாண்புடைத்தது என்பது தெரியுமா ? அந்த மாண்புறு சுதந்திரத்துக்காக இன்று இரத்தம் வெள்ளமாய்ப் பாயுமென்றால் அது கவலைக் குரியதல்லவா ? எல்லா இன மக்களுக்கும் நீதியை வழங்குவோம். அதற்கு அனைவரினதும் பொதுவிணக்கத்தைப் பெற்றுக்கொள்ளுவோம். அதன் மூலம் எமது நாட்டின் ஐக்கியத்தைப் பேணுவோம். இம்சையைத் தோற்கடித்து அகிம்சையை வெற்றிகொள்ளுவோம்.

விடுதலைக்காகவே சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டோம். சுதந்திரம் புறத்திலிருந்து பெறக்கூடியதொன்று. விடுதலை அகத்திலிருந்து உதயமாதல் வேண்டும். சுதந்திரம் எமது குறிக்கோள்களை அடையும் வழியே. ஆனால் எமது குறிக்கோள் விடுதலையாகும். மைத்திரி (வரம்பில்லாத அன்பு), கருணை, முதிதை (மற்றவர்களின் இன்பத்தில் தாம் இன்புறுதல்), உபேக்கை (உள்ளத்தின் சமநிலை) ஆகிய உளப் பாங்குகளின் மூலம்தான் உண்மையான விடுதலை உதயமாகும்.

உயிர்த்துடிப்புள்ள பொருளாதாரமுறை இன்று எமக்கு உள்ளது. சக்திமிக்க சனநாயக ஆட்சிமுறை இன்று எமக்கு உண்டு. பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு முப்படையினரும் பொலிசாரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். திறமையை ஓர் அளவுகோலாகக் கொண்டு நீதி வழங்கப்பட்டு வருகின்றது. ஒழுக்கமும் கட்டுப்பாடும் மீண்டும் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன. தெற்காசியப் பிராந்தியத்தின் தலைமைத்துவம் இலங்கையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள சகல நாடுகளிலும் சகவாழ்வுக் காகவும் சமாதானத்துக்காகவும், சுபீட்சத்துக்காகவும் நாங்கள் ஊக்கமுடன் பணிபுரிந்து வருகின்றோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் ஆகிய சகல மக்கள் இனங்களுக்கிடையிலும் நல்லெண்ணத்தை வளர்ப்போமாக. வன்முறைகளையும் பயங்கரவாதத்தையும் புறக்கணிப்போமாக. நீதிக்குத் தலைவணங்குவோமாக. அச்சம் தவிர்ப்போ மாக. குறுகிய வாதபேதங்களால் பிரிக்கப்படாத இலங்கையினைப் படைத்துக் கொள்வோமாக. அதற்கு வேண்டிய ஆன்மீகச் சக்தியை வளர்த்துக் கொள்வோமாக.

நாங்கள் விடுதலை பெற்றதன் நோக்கம் என்ன ? அந்நியர் ஆட்சிக்குப் பதிலாக வெறுமனே சுயாட்சியொன்றைத் தாபித்துக்கொள்ளவா ? இல்லவே இல்லை. எமது நாட்டு மக்களால் நிருவகிக்கப்படும் ஆட்சியொன்றின் கீழ் சுயாதீன பொருளாதார முறையினை ஆக்கிக்கொள்ளத்தான் நாங்கள் விடுதலை பெற்றுக்கொண்டோம். பல்லின மக்களுக்கிடையில் சமாதான சகவாழ்வினை ஏற்படுத்திக்கொள்ளவே நாங்கள் விடுதலை பெற்றுக் கொண்டோம். மக்கள் ஆட்சியொன்றின் கீழ் உறுதிப்பொருள்களைத் தழுவியதும் நீதி வழுவாததும் சுபீட்சமானதுமான சமுதாயத்தை உருவாக்கவே நாங்கள் விடுதலை பெற்றுக்கொண்டோம். இந்த உன்னதமான குறிக்கோள்களை அடைவதற்கு இன்று எம்மை அர்ப்பணித்துக்கொள்வோமாக.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

உள்நாட்டுப் பண்டங்களை ஏற்றுமதிசெய்து வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக்கொள்ளல் வேண்டும். அந்த அளவுக்கு எமது பொருளாதாரமும் சுதந்திரமாக இயங்கும். எம் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களிடையிலும் நல்லெண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அதற்கேற்றவாறு எமது நாட்டின் பாதுகாப்பும் நீடித்து நிலைக்கும். எமது உறுதிப்பொருளுக்கு இணங்கவே சமூகநீதியும் வழங்கப்படுதல் வேண்டும். அந்த அளவுக்கு எமது நாட்டின் சுயாதிக்கமும் உறுதி நிலை அடையும். 1976 இல் பாராளுமன்றத்தில் எதிரணி உறுப்பினராக இருந்த காலத்தில் நான் எழுதிய "இனிய காவியச் சிந்தனைகள்" என்னும் நூலில் மேற்போந்த எண்ண அலைகள் பின்வருமாறு தீட்டப்பட்டுள்ளன :—

எங்களது பசிதீர்க்க — வெளிநாட்டு உணவேதும் வேண்டாம்.
எங்களது உருமறைக்க — வெளிநாட்டு துணியேதும் வேண்டாம்.
எங்களது நிலைநோக்க — வெளிநாட்டு கண்ணேதும் வேண்டாம்.
எங்களது குறைபோக்க — வெளிநாட்டு மதியேதும் வேண்டாம்.

வெளிநாட்டு உதவிகளை நம்பிவாழும் அளவுக்கு நாங்கள் வெளிநாட்டவர்களது ஏவலின்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை மறத்தல் ஆகாது. எமது மக்களிடையில் அபிப்பிராய பேதங்கள் வளரும் அளவுக்கு, அந்நிய நாட்டவர்களது தலையீடுகள் எம்மைப் பாதிக்குமென்பதை மறத்தல் ஆகாது. ஒழுக்கக் கேடுகளுக்கு இடம் கொடுக்கும் அளவுக்கு நாங்கள் வெளிநாட்டவர்களுக்கு அடிமையாவதையும் மறத்தல் ஆகாது.

இந்த யதார்த்தத்தை நன்கு புரிந்துகொள்வோமாக. அதன் வண்ணம் நடைமுறைச் சாத்தியமானமுறையில் செயல்படுவோமாக. அப்போதுதான் தேசிய சுதந்திரம் உண்மையான விடுதலையை நோக்கி எமது மக்களை இட்டுச் செல்லும்.

அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள்.

## ADDRESS TO THE NATION BY HIS EXCELLENCY RANASINGHE PREMADASA, PRESIDENT ON THE OCCASION OF THE NATIONAL DAY OF SHRI LANKA – 4TH FEBRUARY, 1992

Today is our National Day. It was on a day like this that our country gained Independence from Colonial rule. To be exact, it was on the 4th of February, 1948. Forty four years have elapsed since that blessed event entered our history. It was on that day, at this same spot, that the Rt. Hon. D. S. Senanayake, the Father of our Nation, hoisted the National Flag. It symbolised our Independence.

Many patriots both from the clergy and the laity struggled hard to keep the flame of freedom alive during the period of foreign domination. Today, we pay our tribute to them. We also owe a deep debt of gratitude to the Venerable Members of the Maha Sangha and the patriotic leaders of the Sinhala, Tamil, Muslim and Burgher communities. In recent times they gave us great encouragement to forge ahead with the struggle for Independence.

**How noble is the freedom, we gained unitedly, without shedding even a drop of blood! Today, how tragic it is to see innocent blood being shed to safeguard our unity! Let us mete out fair treatment to all sections of our people. Let us reach a consensus on that. Through such consensus let us protect the unitary character of our country. Let us defeat violence. Let us make non-violence victorious.**

We had to gain Independence to pave the way to Liberation. Independence can be achieved externally. Liberation blossoms out internally through self effort. Independence is only a means. Liberation is our objective. Liberation dawns through compassion, loving kindness, sympathetic joy and equanimity.

**Our economy is buoyant. Our democratic system of government is strong. Our Armed forces and the Police are relentlessly engaged in protecting the people. Justice and equity are meted out to all on the basis of qualifications and merit. Discipline is being enforced. Shri Lanka has assumed the leadership of the South Asian Region. We are promoting peaceful co-existence and mutual co-operation for overall prosperity in our Region.**

Let us forge greater bonds of brotherhood and understanding among all our communities – Sinhala, Tamil, Muslim and Burgher. Let us not be slaves to irrational passions. Let us discard violence and terror. Let us not bow our heads to injustice. Let us not be shaken by fear. Let us make Shri Lanka a country that is not fragmented by parochial issues.

**Why did we free ourselves from foreign rule? Is it only for the purpose of replacing foreign domination with self rule? No. It is to develop an independent economy by the will of our people. It is to build strong bonds of unity among our different communities. It is to create a righteous and prosperous society based on noble human values. Let us today re-dedicate ourselves to redouble our efforts to achieve these great objectives.**

We must earn foreign resources by exporting local produce. To that extent our economy will be fortified. We must build strong bonds of unity among all sections of our people. To that extent the security of our country will be guaranteed. We must

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

bring about social justice on the basis of our time honoured values. To that extent our sovereignty will be strengthened. I gave poetic expression to these aspirations in the book I wrote entitled, "Rasa Kavi Sithuvili" in 1976. At that time I sat in the opposite side. This is what I wrote:

> Let not rice be imported, to satisfy our hunger;
> Let not raiment be imported, to clothe our body;
> Let it not be left to outsiders, to cater to our needs;
> Let us not seek external solutions to resolve our problems!

**Let us not forget that to the extent we exist on external assistance we will be subjected to external pressures. Let us not forget that to the extent we are divided and disunited, external elements will be able to interfere in our internal affairs. Let us not forget that to the extent we allow the growth of immorality, we will be victims of external influence.**

We must accept these realities. We must take practical steps to face these challenges. It is only then that we can make National Independence a vehicle to Liberate our people.

May the blessings of the Noble Triple Gem be with you all!

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

ජනාධිපති ලේකම් කාර්යාලය
25 AUG 2023
පුස්තකාලය